கூடுகிறபோது எண்ணிக்கையின் அடிப்படையில், அனுமதிக்கப்பட்டிருக்கின்ற மாணவிகளின் அடிப்படையில் கல்லூரியின் முதல்வர் அங்கு ஒரு விடுதி தேவை என்று அரசுக்குப் பிரோரணை அனுப்பினால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 70, திரு. அ.இரா. மலையப்பசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

70—

வெற்றிலை ஆராய்ச்சி நிலையம்

***19633—திரு. அ.இரா. மலையப்பசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வெற்றிலை விவசாயிகள் நிறைந்த கபிலர்மலை தொகுதியில் வெற்றிலை ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வெற்றிலை ஆராய்ச்சி நிலையம் கபிலர்மலை தொகுதியில் அமைப்பதற்கு தற்போது உத்தேசம் ஏதும் இல்லை.

திரு. அ.இரா. மலையப்பசாமி: நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதியிலே சில ஆண்டுகளுக்கு முன்பாக வெற்றிலை ஆராய்ச்சி மையமானது நல்லமுறையிலே செயல்பட்டுக்கொண்டிருந்தது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அந்த வெற்றிலை ஆராய்ச்சி மையம் இலாப நோக்கத்துடன் நடைபெறவில்லை என்ற ஒரு காரணம் கூறி, திருச்சி மாவட்டத்திலுள்ள சிறுகமணிக்கு அந்த வெற்றிலை ஆராய்ச்சி மையத்தை மாற்றி, தற்சமயம் அந்த வெற்றிலை ஆராய்ச்சி மையம் சிறுகமணியிலே செயல்பட்டுக் கொண்டு வருகிறது. ஆக, தமிழக அரசு இலாப நோக்கத்தை மட்டும் கணக்கில்கொள்ளாமல் இந்த வெற்றிலைச் சாகுபடியை அதிகரித்து நோய்நொடியில்லாத வெற்றிலையை உற்பத்தி செய்து, வெளி மாநிலங்களுக்கு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2003 மார்ச் 25]

அனுப்பவேண்டும். எனது தொகுதியைச் சேர்ந்த பரமத்தி-வேலூர், பொத்தனூர், பாண்டமங்கலம், வெண்கரை, பாளப்பட்டி, நன்செய்யிடையார், வாளப்பாளையம், அனிச்சம்பாளையம், மற்றும் காவிரியின் இடது கரையிலும், அதேபோல் கரூர் மாவட்டத்திலே வேலாயுதம்பாளையம், புகளூர் மற்றும் நொய்யலில் இருந்து வாங்கல் வரை உள்ள விவசாயப் பகுதிகளிலும் மூன்றில் ஒரு பங்கு விவசாயிகள் வெற்றிலைச் சாகுபடி செய்து வருகின்றார்கள். ஆகவே, ஆயிரக்கணக்கான வெற்றிலை விவசாயிகள் பயன்பெறும் வகையிலே தற்சமயம் சிறுகமணியிலே இயங்கிக் கொண்டிருக்கின்ற வெற்றிலை ஆராய்ச்சி மையத்தையே பரமத்தி-வேலூர் பகுதியில் முன்பு செயல்பட்டது போல் செயல்பட அரசு ஆவன செய்ய வேண்டும். ஆகவே, இந்த வெற்றிலை ஆராய்ச்சி மையத்தை இங்கு மாற்றவேண்டும் என்று தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வேண்டுகோளை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கபிலர்மலைக்கு அருகில் உள்ள பரமத்தி-வேலூரில் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தினுடைய நிதி உதவியுடன் வெற்றிலை வாடல் நோய் ஆராய்ச்சி நிலையம் ஒன்று செயல்பட்டு வந்தது. ஆனால் அந்த நிலையத்திற்குப் போதுமான உள் கட்டமைப்புடைய கட்டட வசதிகள், நிலங்கள் இல்லாத காரணத்தினால் அது சிறுகமணிக்கு மாற்றப்பட்டது. சிறுகமணியில் இருந்து, விவசாயிகளுக்குத் தேவையான ஆராய்ச்சிகளை அது செய்து வருகிறது. எந்த ஆராய்ச்சியினுடைய பயனும் அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு வேளாண்மை விரிவாக்க அலுவலர்களின் மூலமாகக் கிடைக்கிற காரணத்தினால் தற்போது இருக்கிற நிதிநிலையில் புதிதாக ஒன்று தொடங்குகிற சாத்தியம் இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 71, திரு. இ.ஏ. லியாவுதீன் சேட், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

71—

கொள்முதல் நிலையம்

***27645—திரு.இ.ஏ. லியாவுதீன் சேட்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—